

SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | RRB | SSC | BANK EXAM
PSYCHOLOGY
Situation related problems
- CLASS 49 -
TIME
5 PM
FACULTY
SRINIVASAN

# PSYCHOLOGY - Situation related problems

Anbu, Prabhu, Seeni, David and Esha sing one by one. Seeni sings after the person who sings first. The person who sings last sings after Anbu. Esha sings neither first nor last. Two persons are singing between Prabhu and Anbu. The person who sings last is ----------------

1) Anbu 2) Prabhu 3) David 4) Seeni

அன்பு, பிரபு, சீனி, டேவிட், ஈஷா என்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக பாட்டு பாடுகின்றார்கள். முதலாவதாக பாடும் நபருக்கு அடுத்து சீனி பாடுகிறார். கடைசியாக பாடுபவர், அன்புக்கு அடுத்து பாடுகிறார். ஈஷா முதலாவதாகவும் கடைசியாகவும் பாடவில்லை. பிரபுவுக்கும் அன்புவுக்கும் இடையில் இரண்டுபேர் பாடுகின்றனர். எனில் கடைசியாக பாடியவர் யார்?

1) அன்பு 2) பிரபு 3) டேவிட் 4) சீனி

Sekar is taller than Peter but shorter than Mohan. Govind is shorter than Viswa and Viswa is not as tall as Peter. If they are made to stand in a row according to their height, who will be in the middle?

1) Mohan 2) Peter 3) Viswa 4) Govind

சேகர், பீட்டரை விட உயரமானவர். ஆனால் மோகனை விட குள்ளமானவர். கோவிந்த் விஸ்வாவை விட குள்ளமானவர். மற்றும் விஸ்வா, பீட்டரைப் போல் உயரமானவர் இல்லை. அவர்கள் அனைவரும் அவர்களின் உயரங்களின் அடிப்படையில் நின்றால், நடுவில் நிற்பவர் யார்?

1) மோகன் 2) பீட்டர் 3) விஸ்வா 4) கோவிந்த்

The English book is lighter than the Biology book; the Chemistry book is lighter than Physics book; the Biology book is equal in weight to the Chemistry book. Which is the lightest book?

1) Biology 2) Chemistry 3) English 4) Physics

ஆங்கில புத்தகமானது உயிரியல் புத்தகத்தை விட இலேசானது. வேதியியல் புத்தகம், இயற்றியல் புத்தகத்தைவிட இலேசானது. உயிரியல் புத்தகமானது, வேதியியல் புத்தகத்தின் எடைக்குச் சமமானது. மிக கவும் இலேசான புத்தகம் எது?

1) உயிரியல் 2) வேதியியல் 3) ஆங்கிலம் 4) இயற்றியல்

Seven members are standing in a line in an army parade. Q is on the left hand side of R and right hand side of P. O is on right hand side on N and left hand of P. S is On right hand side of R and left hand side of T. Then who is in the centre of a line?

1) S 2) T 3) P 4) Q

ஏழு நபர்கள் இராணுவ அணிவகுப்பில் நின்று கொண்டிருக்கின்றனர். Q-என்பவர் R-என்பவருக்கு இடது புறமாகவும், P-என்பவருக்கு வலதுபுறத்திலும் நிற்கிறார். O-என்பவர் N-ன் வலதுபுறமாகவும் P-க்கு இடது புறத்திலும் நிற்கின்றார். S-என்பவர் R-ன் வலப்புறத்திலும் T-க்கு இடது புறமாகவும் நிற்கின்றார். எனில், வரிசையின் நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?

1) S 2) T 3) P 4) Q

Direction: (Qn.No. 5 - 9)

In the following questions, there are five teachers, A, B, C, D and E teach the following.

(i) A and B teach History, Civics and Mathematics

(ii) C and B teach Geography, Mathematics and Economics subject.

(iii) D and A teach Economics, History and Civics subject.

(iv) E and D teach History, Geography and Economics subject.

Choose the correct alternative from given below alternatives.

வழிமுறை (வினா எண் 5 - 9)

A, B, C, D மற்றும் E என்ற ஐந்து ஆசிரியர்கள் பின்வருமாறு பாடங்களைக் கற்பிக்கின்றனர்.

(i) A மற்றும் B ஆகியோர், வரலாறு, குடிமையியல் மற்றும் கணிதத்தை கற்பிக்கின்றனர்.

(ii) C மற்றும் B ஆகியோர் புவியியல், கணிதம் மற்றும் பொருளியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

(iii) D மற்றும் A ஆகியோர் பொருளியல், வரலாறு மற்றும் குடிமையியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

(iv) E மற்றும் D ஆகியோர் வரலாறு, புவியியல் மற்றும் பொருளியல் பாடத்தை கற்பிக்கின்றனர்.

கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு மாற்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.

Which subject is taught by all teachers.

1) History 2) Geography 3) Civics 4) Economics

எந்தப் பாடம் அனைத்து ஆசிரியர்களாலும் கற்பிக்கப்படுகிறது?

1) வரலாறு 2) புவியியல் 3) குடிமையியல் 4) பொருளியல்

Who teaches all the subject?

1) A 2) B 3) C 4) D

எந்த ஆசிரியர் அனைத்து பாடங்களையும் கற்பிக்கிறார்?

1) A 2) B 3) C 4) D

Which subject is not teach by D?

1) Geography 2) Civics 3) Economics 4) Mathematics

எந்தப் பாடம் D என்பவரால் கற்பிக்கப்படவில்லை?

1) புவியியல் 2) குடிமையியல் 3) பொருளியல் 4) கணிதம்

Which subject is not teach by A?

1) History 2) Geography 3) Civics 4) Economics

எந்தப்பாடம் A என்பவரால் கற்பிக்கப்படவில்லை?

1) வரலாறு 2) புவியியல் 3) குடிமையியல் 4) பொருளியல்

Which subject is teach by E and C jointly?

1.Geography and History
2. History and Economics
2.Economics and Mathematics
4. Economics and Geography

E மற்றும் C ஆகிய இருவரால் இணைந்து கற்பிக்கப்படும் பாடம் எது?

1.புவியியல் மற்றும் வரலாறு
2.வரலாறு மற்றும் பொருளியல்
3.பொருளியல் மற்றும் கணிதம்
4.பொருளியல் மற்றும் புவியியல்

Directions (Qn.NO.: 10 - 12)
Read the following sentences carefully and answer the following questions.
Kumar, Mani, Raja, Sathis and Sakthi are playing Cards. Each one has 9 Cards. Rest of the Cards are on the table. Kumar gives two Cards to Sathis. Sathis gives 4 Cards to Raja. Raja gives 2 Cards to Mani. Sakthi gives 3 Cards to Kumar.

வழிமுறை (வினா எண் 10 – 12)
கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனமாகப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.
குமார், மணி, ராஜா, சதீஸ் மற்றும் சக்தி ஆகிய ஐந்து பேரும் சீட்டு விளையாடுகின்றனர். ஒவ்வொருவர் 9 சீட்டுக்கள் பெற்றுள்ளனர். மீதமுள்ள சீட்டுகள் மேசையில் உள்ளன. குமார் என்பவர் சதீஸ்க்கு இரண்டு சீட்டுகளையும், சதீஸ் நான்கு சீட்டுகளை ராஜாவுக்கு கொடுக்கின்றனார். ராஜா 2 சீட்டுகளை மணிக்கு கொடுக்கிறார். சக்தி மூன்று சீட்டுகளை குமாருக்கும் கொடுக்கிறார்.

How many Cards Kumar has?

1) 10 2) 9 3) 11 4) 12

குமார் வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 10 2) 9 3) 11 4) 12

How many Cards Mani has?

1) 10 2) 11 3) 15 4) 7

மணி வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 10 2) 11 3) 15 4) 7

How many Cards Raja has?

1) 19 2) 20 3) 9 4) 11

ராஜா வைத்திருக்கும் சீட்டுகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 19 2) 20 3) 9 4) 11

There are five houses A, B, C, D and E in a row. A is right side of C and left side of E. E is left side of B and B is left side of D. Which house is in the middle?

1) B 2) C 3) D 4) E

A, B, C, D, மற்றும் E என்ற ஐந்து வீடுகள் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. A என்ற வீடு Cக்கு வலதுபுறமாகவும் E க்கு இடதுபுறமாகவும் அமைந்துள்ளது. E என்ற வீடு B க்கு இடதுபுறமாகவும், B என்ற வீடு D க்கு இடதுபுறமாகவும் அமைந்துள்ளது. எனில், நடுவில் அமையும் வீடு எது?

1) B 2) C 3) D 4) E

A, B, C, D and E are sitting on a bench. A is sitting with B. C and D who are sitting with each other. But D is not sitting with E. Because E is on the left corner of the bench. C's Place is second from the right and A is right to B and E but A is sitting with C, then find the position of A?

1.Between B and D 2. Between B and C

2.Between E and D 4. Between C and E

A, B, C, D, மற்றும் E ஆகியோர் ஒரு இருக்கையில் அமர்ந்துள்ளனர். A மற்றும் B அருகருகில், C மற்றும் D அருகருகிலும் அமர்ந்துள்ளனர். ஆனால் D என்பவர் E-யுடன் அமரவில்லை. ஏனெனில் E என்பவர் இருக்கையின் இடது ஓரத்தில் அமர்ந்துள்ளார். C என்பவர் வலதுபுறத்திலிருந்து இரண்டாவது இடத்திலும் A என்பவர் B, E க்கு வலதுபுறத்திலும் அதேவேளையில் C உடனும் அமர்ந்துள்ளார். எனில், A-ன் நிலை யாது?

1.B மற்றும் D-க்கு இடையில் 2. B மற்றும் C-க்கு இடையில்

2.E மற்றும் D-க்கு இடையில் 4. C மற்றும் E-க்கு இடையில்

Five magazines are lying in a Table. M is lying on F and H is lying under G. F is lying above G and I is lying under H. Which magazine is lying in the centre?

1) M 2) F 3) G 4) I

ஐந்து பத்திரிக்கைகள் ஒரு மேசையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. M என்பது F ன் மேல் மற்றும் H என்பது G ன் கீழ் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. F என்பது G க்கு மேற்புறமாகவும் I என்பது H-ன் கீழும் உள்ளது. எந்த பத்திரிக்கை நடுவில் உள்ளது?

1) M 2) F 3) G 4) I

Five men are standing in a row. B is on the left of C. D is on the right of E. If A is on the left of B. Which man is in the centre?

1) D 2) C 3) E 4) A

ஐந்து பேர் ஒரு வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர். B என்பவர் C-க்கு இடதுபுறமாக நிற்கின்றார். D என்பவர் E-க்கு வலதுபுறமாக நிற்கின்றார். A என்பவர் B-க்கு இடதுபுறமாக நிற்றால், நடுவில் நிற்கும் நபர் யார்?

1) D 2) C 3) E 4) A

Directions: Qn.NO. (17 - 20)

There are six persons A, B, C, D, E and F. C is the sister of F. B is the brother of E's husband. D is the father of A and grand father of F. There are two fathers, three brothers and a mother in group.

வழிமுறை: (17 – 20)

A, B, C, D, E மற்றும் F என்ற ஆறு பேர் உள்ளனர். C என்பவர் F ன் சகோதரி ஆவார். B என்பவர் E ன் கணவரின் சகோதரர் ஆவார். D என்பவர் A ன் தந்தையும் F ன் தாத்தாவும் ஆவார். இரண்டு தந்தைகளும், மூன்று சகோதரர்களும், ஒரு தாயும் அக்குழுவில் உள்ளனர்.

The Female members of the group are .....

1) E, A 2) E, F 3) F,D 4) E, C

அக்குழுவில் உள்ள பெண் உறுப்பினர்கள்?

1) E, A 2) E, F 3) F,D 4) E, C

The fathers present in the Group are .....

1) A, F 2) A, B 3) A,D 4) A, E

அக்குழுவில் உள்ள தந்தையர்கள்?

1) A, F 2) A, B 3) A,D 4) A, E

How many male members are there in the group?

1) 2 2) 3 3) 4 4) 5

அக்குழுவில் உள்ள ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

1) 2 2) 3 3) 4 4) 5

Which of the following is a group of brothers?

1) ABF 2) ABD 3) BFC 4) BDF

கீழ்க்கண்ட எது சகோதரர்களைக் கொண்ட குழுவை குறிக்கிறது?

1) ABF 2) ABD 3) BFC 4) BDF

# Thank You